திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 0161/ஆ4/2022 நாள்: 05.07.2022

பொருள்: பள்ளிக்கல்வி- திருப்பத்தூர் மாவட்டம் - மத்திய கல்வி உதவித்தொகைத்திட்டம் – தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித்தொகை (NMMS) 2022 – தேர்வு நாள்: 05.03.2022 – தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டமை – தெரிவித்தல் – சார்பாக.

பார்வை: 1. புதுடெல்லி, மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை சார்பு செயலாளார் அவர்களின் கடிதம் நாள்: F.No1-6/2020-SS நாள்: 22.12.2021.

2. சென்னை அரசுத் தேர்வுகள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 000233/NMMSS/2021 நாள்: 22.06.2022.

3. சென்னை பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 004210/எம்/இ4/2022 நாள்: 27.06.2022.

******

பார்வையில் 2-காணும் செயல்முறைகளுக்கிணங்க, 2022-2023 ஆம் கல்வி ஆண்டிற்கான மத்திய கல்வி உதவித்தொகைத் திட்டமான தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை வழங்குவதற்கான தேர்வு கடந்த 05.03.2022 அன்று எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவிகளுக்கு அரசுத்தேர்வுகள் துறையால் நடத்தி முடிக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் கடிதத்தில் மேற்கண்ட தேர்வில் பங்குபெற்று கல்வி உதவித்தொகை பெற தகுதியான தெரிவு செய்யப்பட்ட 5900 மொத்த மாணவர்களில் திருப்பத்தூர் மாவட்டத்தில் 47 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். திருப்பத்தூர் மாவட்ட தேர்வுப்பட்டியல் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு திருப்பத்தூர்/வாணியம்பாடி மாவட்டக்கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர் மாவட்ட வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

மேலும், இத்தேர்வில் தகுதி பெற்றுள்ள மாணவர்கள் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வியை தொடரும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ள திருப்பத்தூர்/வானியம்பாடி மாவட்டக்கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர் மாவட்ட வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியரகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: திருப்பத்தூர் மாவட்டத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விவரங்கள்

ஓம்/- 05.07.2022.

முதன்மைக்கல்வி அலுவலர்,

திருப்பத்தூர்

பெறுநர்

1. அரசு/நிதியுதவி உயர்/மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.
2. மாவட்டக்கல்வி அலுவலர்கள் திருப்பத்தூர்/வாணியம்பாடி.
3. வட்டாரக்கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.